மலைப் பகுதி மகளிருக்கும் இலவச பேருந்து பயணத் திட்டம் நீட்டிப்பு

சென்னை, மார்ச் 15: மலைப் பகுதிகளிலும் மகளிருக்கும் இலவச பேருந்து பயணத் திட்டத்தை நீட்டிப்பதற்கான உத்தரவை தமிழக அரசு பிறப்பித்துள்ளது.

இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதால், போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்படும் இழப்பை அரசே ஈடுகட்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறைச் செயலர் ஜெயஸ்ரீ முரளீதரன் வெளியிட்ட உத்தரவு:

மாநிலத்தின் மலைப் பகுதிகளில் வாழும் மகளிர் பயன்பெறும் வகையில் மலைப் பகுதிகளுக்கும் இலவச பேருந்து பயணத் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்று சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டது.

இந்தத்திட்டத்தைச்செயல்படுத்துவதற்கானபரிந்துரைகளை,போக்குவரத்துத் துறை அரசுக்கு அனுப்பியது. அதில், மலைப் பகுதிகளில் மகளிருக்கான இலவச பேருந்து சேவையை அளிக்க ஒரு பயனாளிக்கு ரூ.22 வீதம் இழப்பீடு அளிக்கப்பட வேண்டுமென கூறப்பட்டிருந்தது.

இதை ஏற்றுக் கொண்டு, மலைப் பகுதிகளில் மகளிர் விடியல் திட்டத்தைச் செயல்படுத்துவதால் ஒரு பயனாளிக்கு ரூ.22 வீதம் தேவைப்படும் தொகையை மானியமாக அரசே வழங்கிடும் என்று அந்த உத்தரவில் தெரிவித்துள்ளார். மகளிருக்கான இலவச பேருந்து பயணத் திட்டத்துக்கான மானியத் தொகையாக ரூ.3,050 கோடியை நிதிநிலை அறிக்கையில் அரசு ஒதுக்கியுள்ளது.

தந்தை இறந்த துக்கத்திலும் பிளஸ் 2 தேர்வு எழுதிய மாணவி

நெய்வேலி , மார்ச் 15: தந்தை இறந்த துக்கத்திலும் கடலூர் தனியார் மேல்நிலைப் பள்ளியில் பிளஸ் 2 மாணவி வெள்ளிக்கிழமை அரசு பொதுத் தேர்வு எழுதினார்.

கடலூர் சூரப்பநாயக்கன்சாவடி பகுதியைச் சேர்ந்தவர் ரத்தின வடிவேல், ஓய்வு பெற்ற நில அளவர். இவருக்கு வெள்ளிக்கிழமை அதிகாலை திடீரென உடல்நிலை பாதிக்கப்பட்டு வீட்டிலேயே உயிரிழந்தார். இவரது மகள் ராஜேஸ்வரி (16) கடலூர் தனியார் பள்ளியில் பிளஸ் 2 படித்து வந்தார். இவருக்கு வெள்ளிக்கிழமை இயற்பியல் பாட பொதுத் தேர்வு நடைபெற்றது.

தந்தை இறந்ததால் துயரத்தில் இருந்த நிலையிலும், இயற்பியல் தேர்வு எழுதுவதற்காக ராஜேஸ்வரி பள்ளிக்கு வந்தார். இதையறிந்த ஆசிரியர்கள், மாணவிகள் அவருக்கு ஆறுதல் கூறி, தேர்வு எழுத ஊக்கமளித்தனர். இதையடுத்து, ராஜேஸ்வரி தேர்வு அறைக்கு சென்று தேர்வு எழுதினார். தேர்வு முடிந்ததும் வீட்டுக்குச் சென்று தனது தந்தையின் இறுதிச் சடங்கில் அவர் பங்கேற்றார்.

1,196 செவிலியர்களுக்கு பணி நியமன ஆணை

சென்னை, மார்ச் 15: 1,196 செவிலியர்களுக்கு பணிநியமன ஆணைகளை தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வெள்ளிக்கிழமை வழங்கினார்.

1,196 செவிலியர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கும் நிகழ்வு சென்னை கிண்டியில் உள்ள தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் செவிலியர்களுக்கு பணி ஆணைகளை வழங்கி அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசியதாவது: சுகாதாரத் துறையில் காலியாக உள்ளபணியிடங்களை நிரப்பும் நடவடிக்கைகளை மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் தொடர்ச்சியாகமேற்கொண்டுவருகிறது. அந்த வகையில் கடந்த மாதம் 1,021 மருத்துவர்கள் பணியிடங்கள் நிரப்பப்பட்டு, பணி ஆணைகள் வழங்கப்பட்டன.

அதேபோன்று, கடந்த மாதம் 987 தற்காலிக செவிலியர்களுக்கும்,அதன் தொடர்ச்சியாக 332 ஆய்வக நுட்புனர்களுக்கும் பணி ஆணைகள் வழங்கப்பட்டன. இந்நிலையில், தற்போது 1,196 செவிலியர்களுக்கு பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

கோடை காலம் தொடங்கிவிட்டதால், மது, புகைப் பழக்கங்களை தவிர்க்க வேண்டும். அதிக வெப்பத்தால் உடல் நலிவுறுவோர் உடனடியாக 108 மற்றும் 104 என்ற எண்களைத் தொடர்பு கொண்டு உதவி பெறலாம்.

தற்போது வரை 9,000 கடைகளில் பான்பராக், குட்கா போன்ற போதை பொருள்கள் விற்பனை செய்யப்பட்டது கண்டறியப்பட்டு, அந்த கடைகள் மூடப்பட்டுள்ளன. தர்பூசணி பழங்களில் செயற்கையாக நிறம் ஏற்றப்படும் செயல்கள் நடைபெற்று வருகின்றன. இது தொடர்பாக அனைத்து மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்றார் அவர்.

இந்நிகழ்வில் துறைச் செயலர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநர் ம.கோவிந்தராவ், தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கே.நாராயணசாமி, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் தி.சி.செல்வவிநாயகம், மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் இளங்கோ மகேஸ்வரன், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் ஜெ.சங்குமணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்

'உணவுப் பொருள்களில் கலப்படம் செய்தால் கடும் நடவடிக்கை'

இந்நிகழ்வில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசியதாவது: தமிழகத்தில் சுற்றுலா மையங்களில் செயற்கை குளிர்பானங்கள் பயன்படுத்துவதை தவிர்ப்பது நல்லது என்ற அறிவுறுத்தலை பொது சுகாதாரத் துறை வெளியிட்டுள்ளது.

உணவுப் பாதுகாப்பு துறையினர் தொடர்ச்சியாக அனைத்து மாவட்டங்களில் உள்ள சுற்றுலாத் தலங்களிலும் ஆய்வு மேற்கொண்டு வருகிறார்கள்.

உணவுப் பொருள்களில் கலப்படங்கள் கண்டறியப்பட்டால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். போலி குளிர்பானங்கள் விற்பனை செய்யப்படும் கடைகளின் தகவல்கள் கிடைத்து வருகின்றன. அதன்பேரில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்

"ஹாரிங்டன் சேம்பர்ஸ்", பிளாக் எண். C, எண்.30/1A,
அப்துல் ரஜாக் முதல் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600015.
தொலைபேசி எண் : 044-42010374

LIC HFL
LIC HOUSING FINANCE LTD

மின் ஏல விற்பனை அறிவிப்பு

2002 ஆம் ஆண்டு நிதிச் சொத்துக்கள் பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு மற்றும் பாதுகாப்பு நலன் அமல்படுத்துதல் சட்டத்தின் கீழ் மற்றும் 2002 பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகளின் 8-ம் விதியுடன் பிரிவு 13(2) என்பவற்றின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செயல்படுத்துவதற்கான எல்ஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்-ன் அங்கீகாரமளிக்கப்பட்ட அதிகாரியாக கீழே கையொப்பமிட்டுள்ளவர் இருக்கின்ற நிலையில், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கோரிக்கை அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிலுவையிலுள்ள பாக்கித்தொகையை திரும்பச் செலுத்துமாறு **கடன்தாரர்கள் / அடமானம் வைத்தவர்களுக்கு கடன் கேட்பு அறிவிப்பை** வழங்கியிருந்தார். எனினும், குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைப்பாக்கித் தொகையை திரும்பச் செலுத்த கடன்தாரர்கள் / அடமானம் வைத்தவர்கள் தவறியிருப்பதால், மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் பிரிவுகள் 13(4) மற்றும் 14 மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட விதித்தொகுப்பின் விதி 8-ன் கீழ் வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை பிரயோகித்து, கீழே கையொப்பமிட்டுள்ள நபர் கீழ்க்கண்ட சொத்துக்களை **அடையான உடைமை** (Symbolic Possession) செய்திருக்கிறார்.

பொது மக்களுக்கும் குறிப்பாக திரு. இ மோகனுக்கும் இதன் மூலம் அறிவிப்பது யாதென்றால், கீழே விவரிக்கப்பட்டுள்ள எண்.160, ஜிஎன்டி சாலை, செம்புலிவரம், சோழவரம், சென்னை 600067 என்ற முகவரியில் உள்ள அசையாச் சொத்து LIC HFL-க்கு அடமானம் வைக்கப்பட்டுள்ளது. LIC HFL-இன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் எடுக்கப்பட்ட இந்த அடையான உடைமை, 'எங்கு இருக்கிறதோ அதன் அடிப்படையில்' மற்றும் 'என்னவெல்லாம் இருக்கிறதோ அதன் அடிப்படையில்' மற்றும் 'எந்த மறுவழிவகை இல்லாத அடிப்படை' நிலையில் ஏப்ரல் 03, 2024 அன்று, திரு. இ மோகன் LIC HFL-க்கு செலுத்த வேண்டிய ரூ.33,60,88,985.15/- (04.01.2022 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பு) மேலும் வட்டி, செலவு மற்றும் செலவீனங்களுடன் கூடிய தொகையின் மீட்புக்காக, விற்பனை செய்யப்படும். இதன் குறைந்தபட்ச இருப்பு விலை ரூ.60,00,00,000/- (ரூபாய் அறுபது கோடிகள் மட்டும்) மற்றும் ஈடுபாட்டிற்கான பண வைப்புத்தொகை ரூ.6 கோடி.

திரு. E மோகன் கடன் எண் - 510100005221 & 510100005242

சொத்தின் விவரணை: உருப்படி எண்.1: தற்போது வடசென்னை பதிவு மாவட்டம் மற்றும் செங்குன்றம் துணைப்பதிவு மாவட்டத்திற்குள் திருவள்ளூர் மாவட்டத்தின், பொன்னேரி தாலுகாவைச் சேர்ந்த செம்புலிவரம் கிராமத்தில் புல எண்.58/2-ன் கீழ் அமைந்துள்ள 64 சென்ட் பரப்பளவுள்ள நிலம் மற்றும் அதிலுள்ள கட்டிடம் ஆகியவற்றை உள்ளடக்கிய சொத்தில் அடங்கியுள்ள அனைத்தும். **உருப்படி எண்.2:** தற்போது வடசென்னை பதிவு மாவட்டம் மற்றும் செங்குன்றம் துணைப்பதிவு மாவட்டத்திற்குள் திருவள்ளூர் மாவட்டத்தின், பொன்னேரி தாலுகாவைச் சேர்ந்த செம்புலிவரம் கிராமத்தில் புல எண்.56/3-ன் கீழ் அமைந்துள்ள 38.34 சென்ட் பரப்பளவுள்ள நிலம் மற்றும் அதிலுள்ள கட்டிடம் ஆகியவற்றை உள்ளடக்கிய சொத்தில் அடங்கியுள்ள அனைத்தும். **உருப்படி எண்.3:** தற்போது வடசென்னை பதிவு மாவட்டம் மற்றும் செங்குன்றம் துணைப்பதிவு மாவட்டத்திற்குள் திருவள்ளூர் மாவட்டத்தின், பொன்னேரி தாலுகாவைச் சேர்ந்த செம்புலிவரம் கிராமத்தில் புல எண்.58/4-ன் கீழ் அமைந்துள்ள 24.63 சென்ட் பரப்பளவுள்ள நிலம் மற்றும் அதிலுள்ள கட்டிடம் ஆகியவற்றை உள்ளடக்கிய சொத்தில் அடங்கியுள்ள அனைத்தும். **உருப்படி எண்.4:** தற்போது வடசென்னை பதிவு மாவட்டம் மற்றும் செங்குன்றம் துணைப்பதிவு மாவட்டத்திற்குள் திருவள்ளூர் மாவட்டத்தின், பொன்னேரி தாலுகாவைச் சேர்ந்த செம்புலிவரம் கிராமத்தில் புல எண்.56/2-ன் கீழ் அமைந்துள்ள 6 சென்ட் பரப்பளவுள்ள நிலம் மற்றும் அதிலுள்ள கட்டிடம் ஆகியவற்றை உள்ளடக்கிய சொத்தில் அடங்கியுள்ள அனைத்தும். **உருப்படி எண்.5:** தற்போது வடசென்னை பதிவு மாவட்டம் மற்றும் செங்குன்றம் துணைப்பதிவு மாவட்டத்திற்குள் திருவள்ளூர் மாவட்டத்தின், பொன்னேரி தாலுகாவைச் சேர்ந்த செம்புலிவரம் கிராமத்தில் புல எண்.56/1-ன் கீழ் அமைந்துள்ள 76 சென்ட் பரப்பளவுள்ள நிலம் மற்றும் அதிலுள்ள கட்டிடம் ஆகியவற்றை உள்ளடக்கிய சொத்தில் அடங்கியுள்ள அனைத்தும். **உருப்படி எண்.6:** தற்போது வடசென்னை பதிவு மாவட்டம் மற்றும் செங்குன்றம் துணைப்பதிவு மாவட்டத்திற்குள் திருவள்ளூர் மாவட்டத்தின், பொன்னேரி தாலுகாவைச் சேர்ந்த செம்புலிவரம் கிராமத்தில் புல எண்.109/1-ன் கீழ் அமைந்துள்ள 38 சென்ட் பரப்பளவுள்ள நிலம் மற்றும் அதிலுள்ள கட்டிடம் ஆகியவற்றை உள்ளடக்கிய சொத்தில் அடங்கியுள்ள அனைத்தும். **உருப்படி எண்.7:** தற்போது வடசென்னை பதிவு மாவட்டம் மற்றும் செங்குன்றம் துணைப்பதிவு மாவட்டத்திற்குள் திருவள்ளூர் மாவட்டத்தின், பொன்னேரி தாலுகாவைச் சேர்ந்த செம்புலிவரம் கிராமத்தில் புல எண்.87/1-ன் கீழ் அமைந்துள்ள 52 சென்ட் பரப்பளவுள்ள நிலம் மற்றும் புல எண் 87/2A என்பதன் கீழ் 1 சென்ட் என மொத்தத்தில் 53 சென்ட் பரப்பளவுள்ள நிலம் மற்றும் அதிலுள்ள கட்டிடம் ஆகியவற்றை உள்ளடக்கிய சொத்தில் அடங்கியுள்ள அனைத்தும். **உருப்படி எண்.8:** தற்போது வடசென்னை பதிவு மாவட்டம் மற்றும் செங்குன்றம் துணைப்பதிவு மாவட்டத்திற்குள் திருவள்ளூர் மாவட்டத்தின், பொன்னேரி தாலுகாவைச் சேர்ந்த செம்புலிவரம் கிராமத்தில் புல எண்.58/4-ன் கீழ் அமைந்துள்ள 7 சென்ட் பரப்பளவுள்ள நிலம் மற்றும் புல எண் 56/3 என்பதன் கீழ் 9 சென்ட் என மொத்தத்தில் 16 சென்ட் பரப்பளவுள்ள நிலம் மற்றும் அதிலுள்ள கட்டிடம் ஆகியவற்றை உள்ளடக்கிய சொத்தில் அடங்கியுள்ள அனைத்தும். **உருப்படி எண்.9:** 5 சென்ட்களுக்கான புல எண். 86, 63 சென்ட்களுக்கான புல எண். 88/1, 40 சென்ட்களுக்கான புல எண். 88/2, 49 சென்ட்களுக்கான புல எண். 88/3, 42 சென்ட்களுக்கான புல எண். 88/4, 40 சென்ட்களுக்கான புல எண். 88/5, 37 சென்ட்களுக்கான புல எண். 91/1, 19 சென்ட்களுக்கான புல எண். 91/2 ஆகிய புல எண்களின் கீழ் அமைந்துள்ள 2 ஏக்கர், 95 சென்ட்கள் என்ற மொத்த பரப்பளவைக் கொண்டுள்ள நிலங்கள் மற்றும் அவற்றிலுள்ள கட்டிடங்களை உள்ளடக்கிய சொத்தில் அடங்கியுள்ள அனைத்தும், தற்போது வடசென்னை பதிவு மாவட்டம் மற்றும் செங்குன்றம் துணைப்பதிவு மாவட்டத்திற்குள் திருவள்ளூர் மாவட்டத்தின், பொன்னேரி தாலுகாவைச் சேர்ந்த செம்புலிவரம் கிராமத்தில் இந்நிலச்சொத்துகள் அமைந்துள்ளன. **உருப்படி எண்.10:** 45 சென்ட்களுக்கான புல எண். 106, 34 சென்ட்களுக்கான புல எண். 107/1, 73 சென்ட்களுக்கான புல எண். 107/2 ஆகிய புல எண்களின் கீழ் அமைந்துள்ள 1 ஏக்கர், 52 சென்ட்கள் என்ற மொத்த பரப்பளவைக் கொண்டுள்ள நிலங்கள் மற்றும் அவற்றிலுள்ள கட்டிடங்களை உள்ளடக்கிய சொத்தில் அடங்கியுள்ள அனைத்தும், தற்போது வடசென்னை பதிவு மாவட்டம் மற்றும் செங்குன்றம் துணைப்பதிவு மாவட்டத்திற்குள் திருவள்ளூர் மாவட்டத்தின், பொன்னேரி தாலுகாவைச் சேர்ந்த செம்புலிவரம் கிராமத்தில் இந்நிலச்சொத்துகள் அமைந்துள்ளன. **உருப்படி எண்.11:** தற்போது வடசென்னை பதிவு மாவட்டம் மற்றும் செங்குன்றம் துணைப்பதிவு மாவட்டத்திற்குள் திருவள்ளூர் மாவட்டத்தின், பொன்னேரி தாலுகாவைச் சேர்ந்த செம்புலிவரம் கிராமத்தில் புல எண்.105/2-ன் கீழ் அமைந்துள்ள 93 சென்ட் பரப்பளவுள்ள நிலம் மற்றும் அதிலுள்ள கட்டிடம் ஆகியவற்றை உள்ளடக்கிய சொத்தில் அடங்கியுள்ள அனைத்தும். **உருப்படி எண்.12:** தற்போது வடசென்னை பதிவு மாவட்டம் மற்றும் செங்குன்றம் துணைப்பதிவு மாவட்டத்திற்குள் திருவள்ளூர் மாவட்டத்தின், பொன்னேரி தாலுகாவைச் சேர்ந்த செம்புலிவரம் கிராமத்தில் புல எண். 87/2B-ன் கீழ் அமைந்துள்ள 23 சென்ட் பரப்பளவுள்ள நிலம் மற்றும் அதிலுள்ள கட்டிடம் ஆகியவற்றை உள்ளடக்கிய சொத்தில் அடங்கியுள்ள அனைத்தும். **உருப்படி எண்.13:** தற்போது வடசென்னை பதிவு மாவட்டம் மற்றும் செங்குன்றம் துணைப்பதிவு மாவட்டத்திற்குள் திருவள்ளூர் மாவட்டத்தின், பொன்னேரி தாலுகாவைச் சேர்ந்த செம்புலிவரம் கிராமத்தில் புல எண்.109/2-ன் கீழ் அமைந்துள்ள 82.745 சென்ட் பரப்பளவுள்ள நிலம் மற்றும் புல எண் 85/1 என்பதன் கீழ் 22.25 சென்ட் என மொத்தத்தில் 1 ஏக்கர் 5 சென்ட்கள் பரப்பளவுள்ள நிலம் மற்றும் அதிலுள்ள கட்டிடம் ஆகியவற்றை உள்ளடக்கிய சொத்தில் அடங்கியுள்ள அனைத்தும். **உருப்படி எண்.14:** தற்போது வடசென்னை பதிவு மாவட்டம் மற்றும் செங்குன்றம் துணைப்பதிவு மாவட்டத்திற்குள் திருவள்ளூர் மாவட்டத்தின், பொன்னேரி தாலுகாவைச் சேர்ந்த செம்புலிவரம் கிராமத்தில் புல எண். 58/3B-ன் கீழ் அமைந்துள்ள 33.34 சென்ட் பரப்பளவுள்ள நிலம் மற்றும் அதிலுள்ள கட்டிடம் ஆகியவற்றை உள்ளடக்கிய சொத்தில் அடங்கியுள்ள அனைத்தும்.

மேலே குறிப்பிடப்பட்ட உருப்படி 1 முதல் உருப்படி 14 வரை உள்ளடங்கிய 10 ஏக்கர் 20 சென்ட் பரப்பளவை இச்சொத்து மொத்தத்தில் கொண்டிருக்கிறது.

முக்கிய குறிப்பு: கடன் மீட்பு தீர்ப்பாயம் - III, சென்னை SA எண். 31/2024-இல் 31.01.2024 தேதியிட்ட ஆணைகளின்படி, M/s. பி.ஏ. ஃபுட்வேர் பிரைவேட் லிமிடெட் என்ற குத்தகைதாரர், மாத வாடகையாக ரூ.15 லட்சம் செலுத்தி, வளாகத்தினை பயன்பாட்டில் வைத்துள்ளார். மேற்கூறிய குத்தகைதாரர், அவ்வாறு செய்ய அனுமதிக்கப்படுமானால் ஏலத்தில் இந்த வளாகத்தினை வாங்கக்கூடியவருக்கு மாதந்திர வாடகையை தவறாமல் செலுத்துவதற்கும் மற்றும் சட்டப்படி அந்த உரிமையாளரை ஏற்றுக்கொள்ளவும் ஒப்புக்கொண்டுள்ளார். அவ்வாறு செய்ய அனுமதிக்கப்படவில்லையெனில், மேற்கூறிய குத்தகைதாரர் தாமாக முன்வந்து அந்த வளாகத்தினை 15.01.2026 அன்று அல்லது அதற்கு முன்னதாக காலி செய்வதாகவும் மற்றும் அதுவரை மாதாந்திர வாடகையை தவறாமல் செலுத்தவும் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

செலுத்துமாறு கோரப்படும் தொகை: ரூ.33,60,88,985.15/- என்பதுடன் மேலதிக வட்டி, கட்டணம் மற்றும் செலவுகள்.	கணக்கு விவரங்கள்
கடன் கேட்பு அறிவிப்பு தேதி: 04.01.2022	பயனுறுநரின் பெயர்: எல்ஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்
இயற்உடைமை தேதி: 09.03.2022	வங்கி: ஆக்ஸிஸ் பேங்க், மையப்படுத்தப்பட்ட கலெக்ஷன் ஹப்
16.03.2024 அன்று செலுத்த வேண்டிய மொத்த தொகை: 46,26,62,480/- என்பதுடன் மேலதிக வட்டி, கட்டணம் மற்றும் செலவுகள்.	கணக்கு எண்: HFLESOMASP05221
ஏற்புடைய குறைந்த விலை: ரூ.60,00,00,000/- (ரூபாய் அறுபது கோடி மட்டும்)	IFSC குறியீடு: UTIB0CCH274
பிணை வைப்புத் தொகை (EMD): ரூ.6,00,00,000/- (ரூபாய் ஆறு கோடி மட்டும்)	

மின்-ஏலத்தின் பிற விவரங்கள்:

a)	மின் ஏல வலைதளம்	www.auctionbazaar.com
b)	சொத்து ஆவணங்களின் நிழற்பட நகல்களை ஆய்வு செய்வதற்கான தேதி & நேரம்	2024 மார்ச் 30-ம் தேதி காலை 11.00 முதல் மாலை 3.00 மணி வரை **எல்ஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட், சென்னை உள் அலுவலகம்: "ஹாரிங்டன் சேம்பர்ஸ்", பிளாக் எண். A, முதல் தளம், எண்.30/1A, அப்துல் ரஜாக் முதல் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.**
c)	சொத்தை பார்வையிடல்: அலுவலக வசதிக்கேற்ப நேரம் திர்மானிக்கப்படும்:	2024 ஏப்ரல் 01-ம் தேதி காலை 11.00 முதல் மாலை 3.00 மணி வரை தொடர்பு நபர்: **திரு. மனோஜ் MV,** மொபைல் எண்: 88511 45681
d)	ஆன்லைன் டெண்டர் / ஏலத்தொகை சமர்ப்பிப்பிற்கான இறுதி தேதி	2024 ஏப்ரல் 02-ம் தேதி மாலை 5.00 மணி
e)	மின் ஏல தேதி	2024 ஏப்ரல் 03-ம் தேதி காலை 11.00 மணி முதல் 1.00 மணி வரை

மேற்குறிப்பிடப்பட்ட சொத்தின் மின் ஏல விற்பனைக்கான இந்த பொது அறிவிப்பின் மேலதிக தொடர்ச்சியாக (2002 SARFAESI சட்டத்தின் வரையறைகள் மற்றும் அதன் கீழான விதிகளின்படி) கீழ்க்கண்ட வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி மேற்குறிப்பிடப்பட்ட சொத்துக்களை வாங்குவதற்கு ஆன்லைன் வழிமுறை வழியாக மட்டும் ஆஃப்பர்களை எல்ஐசிஹெச்எஃப்எல் வரவேற்கிறது:

1. **'எங்கு இருக்கிறதோ அதன் அடிப்படையில்'** மற்றும் **'என்னவெல்லாம் இருக்கிறதோ அதன் அடிப்படையில்'** மற்றும் **'எந்த மறுவழிவகை இல்லாத அடிப்படையில்'** மின் ஏல விற்பனை ஆன்லைனில் நடத்தப்படுகிறது. எல்ஐசிஹெச்எஃப்எல்-ன் அனுமதி பெற்ற மின் ஏல சேவை வழங்குனரான, M/s. ஆக்ஷன் பஜார் நிறுவனம் வழியாக இந்த மின் ஏலம் நடத்தப்படும்.
2. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் சிறந்த அறிவு மற்றும் தகவலின்படி, பிரகாரங்களில் வெளியிடப்பட்டிருக்கின்ற அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் மீது வேறுபிற விலைங்கம் ஏதும் இல்லை. வாங்குபவர் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்று ("caveat emptor") என்ற கோட்பாட்டிற்கு ஏலதாரர்கள் கட்டுப்பட்டவர்கள் மற்றும் சொத்தின் அமைவிடம் மற்றும் அடையாளம், நிறுவனத்தின் அல்லது பிணையம் வைக்கப்பட்ட சொத்தின் மீது எந்தவொரு விலைங்கங்கள், சட்டரீதியான கட்டுப்பாடுகள், சொத்துவரி நிலுவைத்தொகைகள், வருமான வரி, கங்க வரி, தொழிலாளருக்குத் தரப்பட வேண்டிய ஊதிய நிலுவைத்தொகைகள், மின்சாரம் மற்றும் பராமரிப்பிற்கான கட்டணங்கள் ஆகியவை குறித்து துணைப்பதிவாளர் அலுவலகங்கள் / சிவில் நீதிமன்றங்களில் பொது பதிவுருக்களை ஆய்வுசெய்தல் குறித்து அவர்களே சொந்தமாக உரிய கவனத்துடன் சரிபார்ப்புகளை மேற்கொள்வது ஏலதாரர்களின் பொறுப்பாக இருக்கும். வெற்றிகரமான ஏலதாரர், சொத்தின் விற்பனை விலைக்கும் கூடுதலாக, அந்த சொத்து தொடர்பான நகராட்சி வரிகள் பராமரிப்பு / சங்கத்தற்கான கட்டணங்கள், மின் கட்டணங்கள், தண்ணீர் வரி / கட்டணம், முத்திரைக் கட்டணம், ஆவணப் பதிவுக் கட்டணங்கள் (பொருந்துமானால்) மற்றும் எந்தவொரு தொடர்புடைய பிற கட்டணங்கள் மற்றும் செலவீனங்களை ஏற்றுக்கொண்டு செலுத்த வேண்டும். மேலே குறிப்பிடப்பட்டவாறு சொத்துக்கள் மீது எந்தவொரு தன்மையையும் கொண்ட அதிகாரப்பகிர்வு, பற்றுரிமை, பொறுப்புறுதிகள் போன்றவற்றிற்கு LICHFL-ஐ பொறுப்பாக்க இயலாது.
3. ஏலம் கேட்க திட்டமிடும் நபர்கள் அவர்களது பெயர்களை **"www.auctionbazaar.com"** என்ற வலைதளத்தில் பதிவு செய்ய வேண்டும் மற்றும் கட்டணமின்றி அவர்களது பயனர் அடையாளம் மற்றும் கடவுச்சொல்லைப் பெற்றுக்கொள்ள வேண்டும். கீழே குறிப்பிடப்பட்டுள்ள சேவை வழங்குனரிடமிருந்து **மின்-ஏலம்** மீது, ஏலம் கேட்க விரும்புபவர்கள் ஆன்லைனில் கிடைக்கும் பயிற்சியினை பெற்றுக்கொள்ளலாம்: **M/s. ஆக்ஷன் பஜார்,** பார்க் அவென்யூ 2, 7-1-28/1/A/1, பார்க் அவென்யூ ரோடு, லீலா நகர், அமீர்பேட், ஹைதராபாத், தெலங்கானா - 500 016. தொடர்புகொள்ள வேண்டிய நபர் - திரு. அசோக் G, மின்னஞ்சல் - **"www.auctionbazaar.com"**, மொபைல் - 7799072999.
4. இந்த மின்-ஏல விற்பனை 2002 SARFAESI சட்டம் / விதிகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டது. இதன்கீழே / வலைதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகள் மற்றும் நிபந்தனைகளும் விருப்பம் கொண்டிருக்கின்ற / பங்கேற்கின்ற ஏலதாரர்களால் சமர்ப்பிக்கப்படும் ஆஃப்பர் / ஏல நிபந்தனைகளுக்கும் உட்பட்டவையாகும்.
5. ஆன்லைன் மின்-ஏலத்தில் பங்கேற்பதற்கு ஒவ்வொரு ஏலதாரரும் அவரது / அவரது சொந்த மின்னஞ்சல் முகவரியைக் கொண்டிருப்பது அவசியம். LICHFL-ன் அங்கீகாரமளிக்கப்பட்ட அதிகாரியின் முன்பாக தகுதியுள்ள ஏலதாரராக, உத்தேசித்துள்ள ஏலதாரர் அதிகாரப்பூர்வமாக பதிவு செய்தவுடன், ஆவணங்களை சமர்ப்பிப்பதன் மூலம், மின் - ஏலத்திற்கான ஏல செயல்தளத்தின் வழியாக பங்கேற்பதற்கான அவரது / அவரது ஆர்வத்தை வெளிப்படுத்த வேண்டும். மின் ஏல சேவை வழங்குனரிடமிருந்து லாகின் செய்வதற்கான அடையாளம் (ID) மற்றும் கடவுச்சொல்லைப் பெறுவது டெண்டர் சமர்ப்பிப்பவரின் / ஆன்லைன் ஏலதாரரின் தனிப்பட்ட பொறுப்பாக இருக்கும்.
6. மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏற்புடைய குறைந்த விலை தொகைக்கும் குறைவாக மேற்குறிப்பிடப்பட்ட சொத்துக்கள் விற்கப்படாது.
7. செலுத்தப்பட்டுள்ள பிணை வைப்புத்தொகை வெற்றிகரமான ஏலதாரராக இருப்பின், அவர் செலுத்த வேண்டிய தொகையில் சரிகட்டப்படும். இல்லையெனில், மற்றவர்களுக்கு திரும்ப வழங்கப்படும். இந்த பிணை வைப்புத்தொகைக்கு வட்டி ஏதும் வழங்கப்படாது.
8. வெற்றிகரமான ஏலதாரர் ஏலத்தொகையை செலுத்த தவறுவாராயின் அல்லது எந்தவொரு விதத்திலும் மின்-ஏலத்தின் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளை கடைப்பிடிக்கத் தவறுவாராயின், அவரால் ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள பிணை வைப்புத்தொகை மீதான உரிமை இழக்கப்பட்டு விடும் மற்றும் அவர் / அவள், அத்தகைய உரிமை இழக்கப்பட்ட தொகை மீது எந்தவொரு உரிமைகோரிக்கையையும் கொண்டிருக்க மாட்டார்.
9. மேற்கண்ட ஏலத்தின் (d) பிற விவரங்களின் படி ஏல சமர்ப்பிப்புக்கான உரிய தேதி மற்றும் நேரத்திற்குள் அல்லது அதற்கு முன்னதாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள சேவை வழங்குனருக்கு பான் அட்டை மற்றும் (ஆதார் அட்டை), முகவரிச்சான்று உட்பட KYC ஆவணங்களின் ஸ்கேன் செய்த நகலை ஆன்லைன் வழியாக www.auctionbazaar.com என்ற இணையதளத்தில் மேற்குறிப்பிடப்பட்ட பிணை வைப்புத்தொகை (EMD) உடன் சேர்த்து சமர்ப்பிக்கலாம்.
10. டெண்டர்கள் திறப்பிற்குப் பிறகு ஏற்புடைய குறைந்தபட்ச விலைக்கும் குறையாத தொகைக்கு தங்களது ஏலங்களை சமர்ப்பித்திருக்கும் விருப்பமுள்ள ஏலம் கேட்கும் நபர்களுக்கு, ஏலம் கேட்புத் தொகையை அதிகரிப்பதற்கு அங்கீகாரமளிக்கப்பட்ட அதிகாரியின் தனிப்பட்ட விருப்ப முடிவின் பேரில் ஒரு வாய்ப்பு வழங்கப்படும்.
11. தொடக்கநிலை ஏல உயர்வுத்தொகை ஒவ்வொரு BID-க்கும் ரூ.5,00,000/- எனநிர்ணயிக்கப்பட்டுள்ளது. அங்கீகாரமளிக்கப்பட்ட அதிகாரியால் இயலாநிறுவுடன் இது முடிவு செய்யப்படும்.
12. விற்பனை குறித்து அங்கீகாரமளிக்கப்பட்ட அதிகாரியால் ஆஃப்பர் ஏற்கப்பட்டவுடன், வெற்றிகரமாக ஏலதாரர் உடனடியாகவே விற்பனை விலையின் தொகையில் 25%-ஐ, ஏற்கனவே செலுத்திய EMD தொகையை ச